செய்தி வெளியீடு எண் 08 நாள் 03.01.2017

# முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களுக்காக சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் 19.01.2017 அன்று நடைபெறவுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்

~~~~~

திருவள்ளுர் மாவட்டத்தில் முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களுக்காக சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் வருகிற 2017-ம் மாதம் ஜனவரி 19 வியாழக்கிழமை காலை 11.00 மணியளவில் திருவள்ளுர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்தில் உள்ள கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளது.

திருவள்ளுர் மாவட்டத்தைச் சார்ந்த முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்கள் சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கலந்து கொண்டு மனு அளித்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கிறார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளுர்.**
~~~~~